ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank

# 2026 வருடத்திற்கு வழங்குனர்களை பதிவு செய்தல்

2026 ஆம் வருடத்திற்குரிய பண்டங்கள், வேலைகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் பதிவு செய்து கொள்ள விரும்பும், அங்கீகரிக்கப்பட்ட வழங்குனர்கள், ஒப்பந்ததாரர்கள், சேவை வழங்குனர்கள் மற்றும் மதியுரை சேவை வழங்குனர்களிடமிருந்து விண்ணப்ப படிவங்கள் கோரப்படுகின்றன.

**தொகுதி**

1. இயந்திர உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் பொருத்தல்கள்
   - 1.1. வளிச்சீராக்கல் இயந்திரங்கள்
   - 1.2. Density Meter மற்றும் அடகு தராசு
   - 1.3. நாணயத் தாள்களை கணிப்பிடும் இயந்திரம்
   - 1.4. CCTV கமெரா மற்றும் அதற்கு தேவையான ஏனைய உபகரணங்கள்
   - 1.5. Pass Book அச்சு இயந்திரம் மற்றும் வேறு அச்சு இயந்திரம் (Dot Matrix போன்ற)

2. சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள்
   - 2.1. பெயர்ப் பலகை, மொனபோல் மற்றும் பைலின் (Monopol/Pylon)
   - 2.2. கிளை வியாபார குறியிடல்(Branding)
   - 2.3. Digital flex மற்றும் Sticker அச்சிடல் வேலைகள். (மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் கொள்வனவு செய்தல்)

3. அச்சிடல் வேலைகள்
   - 3.1. சகல விதமான கடித உறைகள்.
   - 3.2. சகல விதமான மாதிரி படிவங்கள், பதிவேடுகள் (Registers) மற்றும் புத்தகங்கள்.
   - 3.3. சகல விதமான விளம்பர பிரசுரங்கள்.
   - 3.4. பாஸ் புத்தகங்கள்
   - 3.5. பாதுகாப்பு அச்சிடல் வேலைகள். (நிலையான வைப்புச் சான்றிதழ் மற்றும் PIN Mailer)
   - 3.6. கணிணி அச்சிடல் தொடர் கடதாசி (Continue Sheet)

4. நானாவித பொருட்கள் (மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் கொள்வனவு செய்தல்)
   - 4.1. சகல காகிதாதிகள் மற்றும் சிறு உபகரணங்கள்
   - 4.2. அச்சு Cartridge Ribbon & Toner
   - 4.3. கணிணி காகிதாதிகள் (Black light கையொப்ப கடதாசி, மற்றும் Carbonized & Thermal தொடர் அச்சுக் கடதாசி, (ATM,CDM,Palm Top)
   - 4.4. ப்ளாஸ்டிக் உறைகள் (Plastic Covers) (Pass book cover/ ATM card cover)

5. கட்டிட நிர்மாணம் மற்றும் ஒப்பந்தம்
   - 5.1. கட்டிடங்கள்.
   - 5.2. அலுமினிய வேலைகள் மற்றும் பொருத்தல்கள்.
   - 5.3. கிளை உள்ளக பொருத்தல்கள்.
   - 5.4. வலையமைப்பு பின்னல்கள் (Networking)
   - 5.5. மின்சார கம்பி பொருத்தல்கள் (Electrical wiring)

6. ஏனைய சேவைகள் (மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் கொள்வனவு செய்தல்)

6.1. மோட்டார் வாகன புனர்நிர்மாணம்.

6.1.1. இயந்திர புனர்நிர்மாணம்.

6.1.2. மின்னியல் புனர்நிர்மாணம்.

6.1.3. Tinkering & Spray Painting

6.1.4. மோட்டார் வாகன வளிச்சீராக்கல் இயந்திர புனர்நிர்மாணம். (Auto AC)

6.2. வாகன பராமரிப்பு மற்றும் சேவை செய்தல்.

6.3. வளிச்சீராக்கி இயந்திர பராமரிப்பு, புனர்நிர்மாணம் மற்றும் சேவை (Maintenance, Repair & Services)

6.4. CCTV பராமரிப்பு, புனர்நிர்மாணம் மற்றும் சேவை (Maintenance, Repair & Services)

6.5. பாதுகாப்பு சமிக்ஞை கட்டமைப்பு பராமரிப்பு, புனர்நிர்மாணம் மற்றும் சேவை (Maintenance, Repair & Services)

6.6. பெயர்ப்பலகை, Monopole பராமரிப்பு, புனர்நிர்மாணம் மற்றும் சேவை (Maintenance, Repair & Services)

6.7. மின்பிறப்பாக்கி பராமரிப்பு, புனர்நிர்மாணம் மற்றும் சேவை (Generator Maintenance, Repair & Services)

6.8. கணிணி, அச்சு இயந்திரம், UPS இயந்திரம் மற்றும் ஏனைய கணிணி உபகரணங்கள் புனர்நிர்மாணம்

7. மனைப்பொருட்கள்

7.1. சகல வகையிலான அலுமாரிகள்

7.2. அலுவலக கதிரைகள்

7.3. Sofa (வரவேற்பறை கதிரைகள்)

7.4. அலுவலக மேசைகள்

7.5. பாதுகாப்புப் பெட்டக வகைகள்

8. பரிசுப்பொருட்கள்

8.1. குடை

8.2. பாடசாலை புத்தக பொதி, பயணப்பொதி

8.3. உண்டியல்

8.4. உத்துருளி

8.5. புத்தக பொதி/ வியாபார குறியிடப்பட்ட பேனாகள்

8.6. சகல வகையிலான பரிசுப்பொருட்கள்

9. வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் மின்கலம் (Vehicle Tyre, Tube & Battery)

**வரையறைகள் மற்றும் நிபந்தனைகள்**

சகல விண்ணப்பதாரிகளும் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

1. விண்ணப்பதாரிகள் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வியாபாரிகளாக/ ஒப்பந்ததாரர்களாக இருக்க வேண்டும் என்பதுடன் வியாபார முகவரியில் தொலைபேசி, தொலைநகல் மற்றும் மின்னஞ்சல் வசதியிருப்பின் மிகவும் உகந்தது. (வியாபார பெயர் பதிவு சான்றிதழின் பிரதி இணைக்கப்பட வேண்டும்.)

2. மின்சார கம்பி பொருத்தல்களுக்காக (Electrical wiring) மற்றும் வலையமைப்புகள் மேற்கொள்ளல் தொடர்பில் பதிவு செய்ய விரும்பும் ஒப்பந்ததாரர்கள் குறைந்த பட்சம் 05 வருடகால முன்னனுபவத்தை கொண்டிருக்க

வேண்டியதுடன் அண்மைய 03 ஆண்டுகளினுள் ரூ. 5,00,000.00 அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதியிலான ஒப்பந்தங்கள் 05 எனினும் மேற்கொண்டிருக்க வேண்டும்.

3. மேலே தொகுதி இலக்கம் 05 இன் கீழ் (5.1, 5.2, 5.3) கட்டிட நிர்மாணம் மற்றும் உடன்படிக்கைகளுக்காக பதிவு செய்ய விரும்பும் ஒப்பந்ததாரர்கள் பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.
   3.1 வியாபாரம் இலங்கையில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். (வியாபார பதிவு சான்றிதழின் பிரதி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.)
   3.2 CIDA பதிவு இருக்க வேண்டும். (பதிவு சான்றிதழின் பிரதி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.)
   3.3 குறித்த துறையில் குறைந்த பட்சம் 05 வருடகால முன்னனுபவமிருத்தல் வேண்டும். (இதுதொடர்பான உறுதிப்படுத்தல்களுக்கு உரிய ஆவணங்களை இணைத்திருத்தல் வேண்டும்)
   3.4 கடந்த 03 வருட காலப்பகுதியினுள் சாதாரண வருடாந்த ஒப்பந்த பெறுமதி ரூபா மில்லியன்கள் 15 இற்கு மேற் காணப்பட வேண்டும். (இதுதொடர்பான உறுதிப்படுத்தல்களுக்கு வேலை நிறைவுச் சான்றிதழ் இணைத்திருத்தல் வேண்டும்)(2022/2024)

ஏனைய தொகுதிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் அரச திணைக்களங்கள், சட்டபூர்வ சபைகள், அங்கீகரிக்கப்பட்ட தனியார் வியாபார நிறுவனங்களில் அண்மித்த 03 வருடங்களில் இவ்வாறான கட்டளைகள் ஏற்று திருப்திகரமாக வழங்கல் மற்றும் சேவைகளை நிறைவேற்றியுள்ளதாக எழுத்துமூல சான்றுகளுடன் நிரூபிக்க வேண்டும்.

4. தொகுதி இலக்கம் 6.3, 6.4, 6.5 மற்றும் 6.7 ஆகியவற்றுக்கான பதிவுகளுக்கு ஆகக்குறைந்தது 05 வருட முன்னனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும். (இதுதொடர்பான உறுதிப்படுத்தல்களுக்கு உரிய ஆவணங்களை இணைத்திருத்தல் வேண்டும்)

5. இயந்திரம் மற்றும் உபகரணங்களை புனரமைத்தல் மற்றும் பொருட்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கும் விண்ணப்பதாரிகள் உரிய புனரமைப்புகளை செய்வதற்கு தேவையான நேரங்களில் தொழிற்சாலை வசதிகளை தம்வசம் கொண்டிருக்க வேண்டும்.

6. விண்ணப்ப படிவங்களை **எமது www.rdb.lk இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து** கொள்ளும் வசதி விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் மாத்திரம் விண்ணப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன் அவ்வாறில்லாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

7. ஒரு தொகுதியின் கீழ் உள்ள உப தொகுதிகளுக்கு ஒரே படிவத்தில் விண்ணப்பிக்க முடியும் என்பதுடன் அனைத்து பிரதான தொகுதிகளுக்கும் வெவ்வேறாக விண்ணப்பிக்கப்பட வேண்டும். அதற்காக மீளளிக்கப்படாத ரூபா 5000/- வீதம் (பிரதான 09 தொகுதிகளுக்கும் வெவ்வேறாக பதிவுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.) பதிவுக் கட்டணம் விண்ணப்ப படிவங்களை பாரமளிக்கும் போது ரொக்கப்பணமாக செலுத்தப்பட வேண்டும்.

8. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2025.12.29 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பிரதான முகாமையாளர் - கொள்முதல் பிரிவு, பிரதேச அபிவிருத்தி வங்கி, பிரதான அலுவலகம், இலக்கம் 933, கண்டி வீதி, வெதமுல்ல, களனியில் அல்லது மத்திய, ஊவா, கிழக்கு, வடமேல், வடமத்திய, மேற்கு மற்றும் தெற்கு ஆகிய மாகாண அலுவலகங்களுக்கு நேரடியாக சென்று ஒப்படைக்க வேண்டும். (எமது www.rdb.lk இணையத்தளத்தில் குறித்த மாகாண அலுவலகங்களின் முகவரிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.)

9. விண்ணப்பப்படிவத்தை தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வழங்குனர்களை பதிவு செய்தல் - 2026"** மற்றும் தொகுதி எண் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

10. வியாபார பெயர் பதிவு சான்றிதழ், இவ்வாறான கட்டளைகளை பெற்று திருப்திகரமாக வழங்கல் மற்றும் சேவைகளை நிறைவேற்றியுள்ளதாக எழுத்து மூல சாட்சிகளின் பிரதிகள் (கொள்வனவு கட்டளைகள் அல்லது ஒப்பந்தத்தின் பிரதி) மற்றும் கோரப்பட்டுள்ள ஏனைய ஆவணங்கள் இணைக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல்களின்றி நிராகரிக்கப்படும் என்பதுடன் அவ்வாறான விண்ணப்பதாரிகள் வழங்குனர்களாக பதிவு செய்யப்படமாட்டார்கள்.

11. பணிப்பாளர் சபை அங்கத்தவர், அலுவலக ஊழியர்கள் அல்லது வாழ்க்கைத்துணை அல்லது அவர்களின் பிள்ளைகள் விண்ணப்பதாரியாக/ உரிமையாளராக/ பங்காளராக/ இயக்குனராக உள்ள நிறுவனங்கள் வழங்குனராக பதிவு செய்யப்பட தகுதி பெறாது.

12. மூன்று சந்தர்ப்பங்களில் ஏலத்திற்கு சமூகம் தராதவர்கள் அல்லது நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற் பொருட்கள் சேவைகளை வழங்க தவறுபவர்கள் அல்லது தரமற்ற பொருட்கள், சேவைகள், புனர்நிர்மாணம் மற்றும் பராமரிப்பு வழங்குனர்களின் பெயர்கள், வழங்குனர் பதிவுகளிலிருந்து நீக்கப்படுவது வங்கியின் விருப்பின் பேரில் மேற்கொள்ளப்படும்.

13. ஒவ்வொரு விண்ணப்பப்படிவமும் மதிப்பாய்வுகளுக்கு உள்ளாக்கப்படும் என்பதுடன் வங்கியின் தீர்மானத்தின்படி தகுதிகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளை பதிவு செய்யும் உரிமை வங்கிக்கு உரியது. தகுதிகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகளுக்கு அதைப்பற்றி எழுத்து மூலம் அறிவிக்கப்படும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் முகாமையாளர் - கொள்முதல் பிரிவிற்கு 011-2035454 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

சிரேஷ்ட முகாமையாளர் - கொள்முதல் பிரிவு<br>
பிரதேச அபிவிருத்தி வங்கி,<br>
பிரதான அலுவலகம்,<br>
இலக்கம் 933இ கண்டி வீதி,<br>
வெதமுல்ல, களனி.<br>
தொலைபேசி : 011-203 54 54<br>
தொலைநகல் : 011 290 68 83